2018 மார்ச் 20]

மஞ்சளைத் தரம் பிரிக்கும் கிடங்கை உருவாக்கித் தருவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் மஞ்சளுக்கென்று தனி வணிக வளாகம் அமைக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

திரைப்படக் கல்லூரி

***16347—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் திரைப்படக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

நாங்குநேரி தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள், நாங்குநேரியில் திரைப்படக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினைத் தொடுத்திருக்கின்றார். நமது நாட்டிலேயே 3 இடங்களில் மட்டும்தான் அரசின் சார்பாக திரைப்படக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின்

கட்டுப்பாட்டின்கீழ் புனேவில் ஒன்றும், கொல்கத்தா சத்யஜித்ரே திரைப்படக் கல்லூரி மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் ஒன்றும் இயங்கி வருகின்றன. மூன்றாவதாக, நமது தலைநகரான சென்னையில் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரில் அரசு திரைப்படக் கல்லூரி மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் சிறப்பாக இயங்கி வருகின்ற காரணத்தினால், மற்ற இடங்களில் திரைப்படக் கல்லூரி துவங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரைப்படத் துறை என்பது அடிப்படைத் தேவையை, மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக அரசுக்கும், பொது மக்களுக்கும் எடுத்துச் சொல்கின்ற ஒரு துறை. எங்கள் இளந்தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களின் காலத்திலேதான், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை நாங்கள் பெற்றுக் கொடுத்தோம். அதற்குமுன்பே, மகாத்மா காந்தி அவர்கள் 1913–ல்* South Africa*–விலிருந்து* London High Commission*–க்கு தமிழ் மொழியை* Classical language *ஆக அறிவிக்க வேண்டுமென்று கடிதம் ஒன்றை எழுதினார். அந்த இயக்கத்தின் சார்பாக இன்று கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு ஒன்றினை கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் பேசுகின்றபோது, தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பெற்றுத் தந்ததாக ஒரு தகவலை இங்கே பதிவு செய்திருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ராகுல் காந்தி அவர்கள் பெற்றுத் தந்ததாக ஒரு தகவலை இங்கே பதிவு செய்திருக்கிறார். ஆனால், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுத் தருவதற்கு மூலக் காரணமாக இருந்தது அன்னை சோனியா காந்தி அவர்கள். திரு. மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில்தான் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து புரிந்துகொண்டு,*

2018 மார்ச் 20]

அதற்கேற்ற வகையில் தன்னுடைய கருத்தைப் பதிவு செய்யுமாறு நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கருத்தை வரவேற்று, தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தருவதற்கு காரணமாக இருந்தவர் அன்னை சோனியா காந்தி அவர்கள்தான் என்பதை நாங்கள் பெருமையாக நினைத்துக்கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். திரு. ராகுல் காந்தி அவர்களுடைய பெயரை நான் குறிப்பிட்டது, அவர் அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தினாலும், அந்த இயக்கத்தோடு அவர் இருக்கின்ற காரணத்தினாலும்தான் அப்படிச் சொன்னேன். தவறு என்றால் நீங்கள் அதைப் பொறுத்தருள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரைப்படக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பதற்குக் காரணம், எல்லோரும் நடிக்க வேண்டும், கதை ஆசிரியராக வேண்டும், பாடல்கள் பாட வேண்டுமென்று சென்னை மாநகரை நோக்கித்தான் வருகிறார்கள். ஆனால், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. அங்கே, கலைத் திறன் படைத்தவர்கள் அதிகமான அளவில் இருக்கின்றனர். மிகவும் பிரசித்திபெற்ற திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், திரு. கே.வி. மகாதேவன் அவர்கள், திரு. டி.கே. பகவதி அவர்கள், திரு. டி.கே. சண்முகம் அவர்கள், அகஸ்தீஸ்வரத்தில் பிறந்து, கலைமாமணி விருது பெற்ற திரு. வே. நாராயண பெருமாள் நாடார் அவர்கள், திரு. விஸ்வநாத தாஸ் அவர்கள் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் சென்று சுதந்திர வேட்கையை எழுப்பி, சுதந்திரம் பெறுவதற்காக நாடகத் துறை மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் நன்றாகப் பேசுவீர்கள். உங்களுக்கு நன்றாக விவரங்கள் தெரியும். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எச். வசந்தகுமார்: ஒரு நிமிடம். திரு. சந்திரபாபு அவர்கள், திரு. டி.எஸ். பாலையா அவர்கள், களக்காடு திரு. விசு ஆகியோர்

southern part–லிருந்துதான் வந்திருக்கின்றனர். எனவே, அங்கே ஒரு திரைப்படக் கல்லூரி அமைத்தால் அனைத்து இளைஞர்களுடைய திறமையை இந்த உலகத்திற்கே எடுத்துக் காட்டுகின்ற ஒரு வாய்ப்பு கிடைக்கும். இந்தியாவிலேயே 3 திரைப்படக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. தமிழ்நாட்டில் ஒரு திரைப்படக் கல்லூரி மட்டும்தான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு திரைப்படக் கல்லூரி அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களில் நன்றாக நடிப்பவர்கள்கூட சிலர் இருக்கின்றனர். எங்கள் தெற்குப் பகுதியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் உட்பட எல்லோரும் நன்றாக நடிப்பார்கள். நானும் நன்றாகவே நடிப்பேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படக் கல்லூரி ஒன்று அமைத்துத் தருவதற்கு எங்கள் மூன்று மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் தயாராகயிருக்கிறோம். அதற்கு நமது பேரவைத் தலைவர் அவர்கள் அரசாங்கம்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத் திரைப்படத் துறையின் வரலாற்றிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலம்தான் பொற்காலம் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தமிழக அரசின் சார்பாக, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், அகில இந்திய அளவிலே அரசால் நடத்தப்படும் மூன்று திரைப்படக் கல்லூரிகளில் ஒன்றாக விளங்கி வருகின்றது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே புனாவில் ஒரு திரைப்படக் கல்லூரி, கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித் ரே திரைப்படக் கல்லூரி ஆகிய பயிற்சி நிறுவனங்கள் மற்ற இரண்டு கல்லூரிகள் ஆகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தக் கல்லூரியில் மாண்புமிகு இதய

2018 மார்ச் 20]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் மற்ற இரண்டு இடங்களிலும் இல்லாத அளவிற்கு 6 பட்டயப் படிப்புகளை பட்டப் படிப்புகளாக மாற்றி, Bachelor of Visual Arts (Cinematography), Bachelor of Visual Arts (Digital Intermediate), Bachelor of Visual Arts (Audiography), Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing), Bachelor of Visual Arts (Film Editing), Bachelor of Visual Arts (Animation and Visual Effects) *பட்டப் படிப்புகளை அகில இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் தோற்றுவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஒவ்வோர் ஆண்டும் இங்கே ஒவ்வொரு பாடப் பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மாணவர் சேர்க்கையானது கல்வியாண்டிலே நாளிதழ்களில் முறையாக விளம்பரம் செய்யப்பட்டு, பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் தேர்வுக் குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு, கல்விக் கட்டணமாக, மிகக் குறைந்தக் கட்டணமாக ரூ.15,000/–மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–மும், வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/–மும் வசூலிக்கப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டிருக்கின்றது. கல்வியின் இறுதியாண்டில் அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டய குறும்படம்வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்க பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், 2017–2018 ஆம் நிதியாண்டு முதல் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்பு செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி 15,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி தமிழக அரசால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு சிறப்புமிக்க இந்தக் கல்லூரி, மாணவர்களைத் தரமான மாணவர்களாக, இந்தியாவிலேயே தலைசிறந்த மாணவர்களாக உருவாக்கியதன் காரணமாகத்தான் சமீபத்திலே கோவாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவிலே பங்குபெற்று, சிறந்த படத் தயாரிப்பிற்கான விருதை தமிழக கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பெற்றார்கள் என்ற

வரலாற்றுச் செய்தியை இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசின் சார்பாக இந்தக் கல்லூரி நடத்தப்பட்டு வருகின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே மற்ற இடங்களிலே அரசின் சார்பாக இயங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவிலே எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்படுகின்ற ஆக்கப்பூர்வமான பணியை இன்றைக்கு அரசு முன்முயற்சியாக எடுத்து வருகின்றது. அப்படி பல்கலைக்கழகமாக அது உருவாகின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, மற்ற அனைத்து உறுப்பினர்களும் சொன்னார்கள், தென்மாவட்ட மக்கள் நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றோம் என்று. நானும் தென் மாவட்டத்தைச் சேர்ந்தவன்தான். எனவே, நிச்சயமாக அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, பல்கலைக்கழகமாக இது தரம் உயர்த்தப்படுகின்ற நேரத்திலே, மற்ற இடங்களிலே அரசு திரைப்படக் கல்லூரியை நிறுவுவதற்குண்டான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று சொல்லி, எங்களையும் அரவணைத்துச் செல்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவுதூரம் நாம் திறமைகளை வெளியே கொண்டு வருகிறோமோ அதற்கேற்ப தமிழ்நாட்டின் பெயரும், இந்தியாவின் பெயரும் வெளி உலகிற்கு தெரிய வரும். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நடிப்பு என்றாலே சிவாஜி கணேசன்தான். ஆட்சியிலே இருந்த எம்.ஜி.ஆர் அவர்களும், முன்னாள் முதலமைச்சர் அவர்களும் நடிப்புத் துறையிலேயிருந்து வந்தவர்கள்தான். எனவே, நீங்கள் தென்புலத்தையும் சற்று பாருங்கள் என்று எங்கள் புலத்து அமைச்சர் அவர்களையும், அரசையும் கேட்டுக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்களும் இதற்கு உறுதுணையாக இருந்து, திரைப்படக் கல்லூரி ஒன்றை modern

2018 மார்ச் 20]

technology–*யுடன் அமைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாக்கிற்கு நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

வணிக வரி அலுவலகக் கட்டடம்

***19351—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் வணிக வரி அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இவ்வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட திருத்துறைப்பூண்டி கிராமத்தில் புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மண்ணின் மைந்தர் திராவிட இனத்தினுடைய*